**தலைப்பு 149 – கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் மற்றும் 2 ஆம் பந்திகளில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தியிலிருந்து ஒவ்வொரு தலைப்பிற்கும் உரித்தான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| தலைப்பு | திணைக்களப் பெயர் |
|---|---|
| 295 | வர்த்தகத் திணைக்களம் |
| 297 | நிறுவனப் பதிவாளர் திணைக்களம் |
| 299 | இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம் |
| 303 | புடவைக் கைத்தொழில் திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மேற்குறித்த 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை பின்வரும் திகதிகளில் அவ் அமைச்சின் செயலாளருக்கும் திணைக்களங்களின் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு மற்றும் திணைக்களங்கள் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை விநியோகிக்கப்பட்ட திகதி |
| --- | --- | --- |
| 149 | கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு | 2015 யூலை 29 |
| 295 | வர்த்தகத் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 26 |
| 297 | நிறுவனப் பதிவாளர் திணைக்களம் | 2015 செப்தெம்பர் 07 |
| 299 | இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம் | 2015 ஆகஸ்ட் 06 |
| 303 | புடவைக் கைத்தொழில் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 31 |

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்குகள்

#### மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 3,217 மில்லியன் ஆனதுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,962.80 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் ஒவ்வொரு திணைக்களங்களினதும் தேறிய ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்பு ரூபா 236.26 மில்லியனிற்கும் ரூபா 1.55 மில்லியனிற்கும் இடையிலான வீச்சில் அதாவது தேறிய ஏற்பாட்டில் 1.85 சதவீதத்திலிருந்து 9.08 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 149 | 2,601.07 | 2,364.81 | 236.26 | 9.08 |
| 295 | 107.00 | 105.02 | 1.98 | 1.85 |
| 297 | 30.30 | 27.60 | 2.70 | 8.90 |
| 299 | 17.25 | 15.70 | 1.55 | 8.90 |
| 303 | 461.38 | 449.66 | 11.72 | 2.54 |
| கூட்டுத்தொகை | **3,217.00** | **2,962.79** | **254.21** | |

## 2.2 வருமானக் கணக்கு

### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களத்தால் 2014 ஆம் ஆண்டிற்கான வருமானக் குறியீடு 2 இற்காக ரூபா 140 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 158.54 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. இதன் படி, மதிப்பிடப்பட்ட வருமானத்தில் முறையே 8.8 சதவீத வருமானமும் 70.1 சதவீத வருமானமும் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| வருமானக் குறியீடு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு வருமானம் | உள்ளபடி யான வருமானம் | மிகை. | மிகை மதிப்பீட்டின் சதவீதமாக |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.03.02.10 | 130.0 | 141.53 | 11.53 | 8.8 |
| 20.03.02.12 | 10.0 | 17.01 | 7.01 | 70.1 |
| | **140.0** | **158.54** | **18.54** | |

## 2.3 முற்பணக் கணக்குகள்

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களிற்கான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரம் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 149 | 12.00 | 8.44 | 8.00 | 8.79 | 65.00 | 37.38 |
| 295 | 6.00 | 3.32 | 2.00 | 4.14 | 20.00 | 12.68 |
| 297 | 5.00 | 4.45 | 2.10 | 3.04 | 30.00 | 13.06 |
| 299 | 2.50 | 2.47 | 1.00 | 1.22 | 10.00 | 3.69 |
| 303 | 5.00 | 2.47 | 3.00 | 2.95 | 30.00 | 13.90 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள அலுவலகம் ஒன்றில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதி ரூபா 84,524 ஆக நிலவியது.

## 2.5 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களுக்கு உரித்தான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 54.13 மில்லியன் ஆகும். விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இல. | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| ----------------------------- | -------------------------- | ---------- |
| | | ரூபா |
| கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு | 6000/0000/000/0015/0060/000 | 50.91 |
| இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம் | 6000/0000/000/0015/0154/000 | 0.08 |
| புடவைக் கைத்தொழில் திணைக்களம் | 6000/0000/000/0015/0158/000 | 3.14 |
| | | -------- |
| | | **54.13** |
| | | ==== |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை மற்றும் புத்தகங்களின் படி கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சினதும் அவ் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களினதும் ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளிற்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அம் முகாமைத்துவ அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் இருந்து 7 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு – 149 கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

அமைச்சினால் வாகனம் தொடர்பான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 06 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாட்டைப் பயன்படுத்துவதற்கு போதிய கட்டுநிதிகள் திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்தால் வழங்கப்பட்டிராமையால் அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 9.45 சதவீதத்திலிருந்து 34.73 சதவீதம் வரையான அளவால் ஏற்பாடு எஞ்சியிருந்தது.

(ஆ) இவ் உப்புத் தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக செலவின விடயத்திற்கு ரூபா 10,000,000 தொகையான ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், இச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிராததன் காரணமாக மொத்த தேறிய ஏற்பாடும் எஞ்சியிருந்தது.

(இ) 12 செலவின விடயங்களுக்காக ரூபா 141,394,628 தொகையான மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயங்களுக்கான தேறிய ஏற்பாட்டின் 23 சதவீதத்தில் இருந்து 100 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

**3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

14901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அன்றைய தினம் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 1,081,902 தொகையான மீதிகளில் ரூபா 779,702 கூட்டுத்தொகையான மீதி 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலவி வந்த போதிலும் அந் நிலுவை மீதியை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டு விலகிச் சென்ற உத்தியோகத்தர்களின் 5 ஆண்டுகளுக்கு மேலான காலமாக நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 161,402 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு 2014 திசெம்பர் 31 வரையிலும் அமைச்சு தவறியிருந்தது.

**3.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | |
| XII ஆம் அத்தியாயத்தின் 23.18 ஆம் பிரிவு | ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் நாட்டிற்கு வெளியே செலவிடும் லீவு தொடர்பான ஓர் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்**

| | |
|---|---|
| நிதிப் பிரமாணம் 1646 | 28 வாகனங்களுக்கு உரித்தாக மீளாய்வாண்டிற்கு உரித்தான நாளாந்த ஓட்ட அட்டவணையும் மாதாந்தப் பொழிப்பு அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.5 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) சுற்றாடலுக்கு சாதகமான கடன் திட்டச் செயற்திட்டம்**

2005 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மேற்குறித்த செயற்திட்டங்கள் 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை கடனை வழங்கியிருக்கவில்லை. செயற்படும் 5 ஆண்டுகளில் அமைச்சால் வழங்கப்பட்டிருந்த கடன் தொகை அளவில் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பங்களிப்புக் கடன் வழங்கும் நிறுவகங்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 1,133,597,701 ஆனதுடன் 2010 ஆம் ஆண்டு முதல் செயற்பாட்டுக் கடன் தொகையாக செயற்படும் இச் செயற்திட்டத்திற்கு உரித்தாக மத்திய வங்கியால் அறவிடப்பட்ட தவணைப்பணம் மற்றும் வட்டித் தொகை ரூபா 5,314,505,883 ஆகக் காணப்பட்டது.

**(ஆ) சிறிய மற்றும் சிறு கைத்தொழில் ஒழுங்கமைப்பு மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்திச் செயற்திட்டம்**

இலங்கை அரசாங்கம் மற்றும் ஜய்கா நிறுவகத்துடன் 2004 திசெம்பர் 07 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்டிருந்த இக் கடன் வழங்கும் செயற்திட்டம் 2012 மே 01 ஆம் திகதி முதல் செயற்படு நிதியமாக செயற்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தின் செயற்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(i) செயற்திட்டத்தில் இருந்து ரூபா 680,500 செலவிடப்பட்டு கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அச் செலவினம் மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்படாது செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவின் செயற்பாட்டுச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிப்படுத்தப்பட்டிருந்த மொத்தக் கடன் தொகை ரூபா 1,009,761,500 தொகையாகக் காணப்பட்ட போதிலும், அன்றைய தினத்தில் செயற்திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் இது ரூபா 825,614,780 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 184,146,720

தொகையான கடன் தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iii) இலங்கை மத்திய வங்கியில் பேணப்பட்ட செயற்பாட்டு நிதியத்தில் பயன்படுத்தப்படக் கூடிய நிதியத்தின் பெறுமதி ரூபா 830,050,000 தொகையான போதிலும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் அப் பெறுமதி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதியத்தின் செயற்பாட்டு அறிவுறுத்தல்களின் படி, தொழில்நுட்ப மாற்றம் மற்றும் பொது நடவடிக்கைகளுக்காக துணைக் கடன் வழங்கப்படக்கூடிய போதிலும் மீளாய்வாண்டின் போது தொழில்நுட்ப மாற்றத்தின் கீழ் எவ்வித கடன் தொகையும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(v) மீளாய்வாண்டின் போது பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகையில் ரூபா 267.55 மில்லியன் தொகை அல்லாவிடின் 32 சதவீதம் உணவு தயாரிப்பு, குடிபான வகைகள் மற்றும் புகையிலை சார்ந்த உற்பத்திக்காகவும், எஞ்சிய பணத்தொகையான ரூபா 558.07 மில்லியன் தொகை ஏனைய 19 பிரிவுகளுக்காகவும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. மேலும், 309 மொத்த துணைக் கடன்களில் 100 கடன்கள் மேற்குறித்த பிரிவிற்காக மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. இதன் படி, பிரிவுகளுக்கிடையே கடன் சமமாகப் பகிரப்பட்டிராமை வெளிப்படுத்தப்பட்டது.

(vi) 2014 திசெம்பர் மாதம் அளவில் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பொதுக் கடன் தொகையில் ரூபா 516,853,200 தொகை அல்லாவிடில் 62 சதவீதம் மேல்மாகாணத்திற்கும் வடமேல் மாகாண தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(vii) செயற்பாட்டு அறிவுறுத்தல்களின் படி, கடன் வழங்கப்படுகையில் முன்னுரிமை கிராமப் பிரதேசங்களுக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் வழங்கப்பட்ட கடன்களில் ரூபா 271,859,600 தொகை அதாவது 33 சதவீதமும் மேல் மாகாண தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

**3.6 செயலாற்றல்**

2014 வருடாந்த பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

**போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராத முக்கிய பணிகள்**

2014 ஆம் ஆண்டிற்காக அமைச்சால் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 03 கைத்தொழில் பேட்டைகளுக்காக ரூபா 586 மில்லியன் தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அச் செயற்பாடுகளில் இருந்து எவ்வித நிதி மற்றும் பௌதீக முன்னேற்றமும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 57 | 42 | 15 |
| (ii) | மூன்றாம் நிலை | 12 | 8 | 4 |
| (iii) | இரண்டாம் நிலை | 988 | 685 | 303 |
| (iv) | ஆரம்ப நிலை | 99 | 89 | 10 |
| | மொத்தம் | **1,156** | **824** | **332** |

**4. தலைப்பு 295 – வர்த்தகத் திணைக்களம்**

**4.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | வாகனப் பட்டியல் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1674(உ) |
| (ii) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டியின் 2.11.2 ஆம் வழிகாட்டல் |
| (iii) | குழுக்கூட்ட அறிக்கை | அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டியின் 2.11.3(அ) ஆம் வழிகாட்டல் |

**4.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்**

03 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அவ் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து மீதி, மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டுத் தொகையில் 14 சதவீதத்தில் இருந்து 78 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடு எஞ்சியிருந்தது.

**4.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

29501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அன்றைய தினத்தில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 38,650 தொகையான கடன் மீதி 3 ஆண்டு காலமாக நிலவி வந்த போதிலும் அக் கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் படி, திறைசேரி கணனி அறிக்கைக்கும் திணைக்களப் புத்தகங்களிற்கிடையிலான கணக்கு மீதிக்கும் இடையே ரூபா 289,336 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(இ) 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் 6.3 ஆம் பந்தியின் படி, அங்கத்துவக் கடன் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

**4.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.4.1 வருடாந்த செயலாற்றல் திட்டம்**

2014 திசெம்பர் 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் மீளாய்வாண்டிற்காக செயலாற்றல் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4.2 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4.3 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிராததுடன் அந் நடவடிக்கைகள் கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அப் பிரிவால் போதிய உள்ளகக் கணக்காய்வு மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.5 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | |
| XV ஆம் அத்தியாயத்தின் 9.4 ஆம் பிரிவு | வெளிநாட்டிற்குச் சென்ற உத்தியோகத்தருக்கு கடந்த 5 ஆண்டுகளின் போது வெப்ப உடைப் படிப்பணம் வழங்கப்பட்டிருக்கவில்லை என உறுதிப்படுத்தப்படாது உத்தியோகத்தருக்கு 75 பவுண்ஸ் வெப்ப உடைப் படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| **(ஆ) சனாதிபதி செயலகச் சுற்றறிக்கை** | |
| 1993 திசெம்பர் 31 ஆம் திகதிய பீபீஏ/6/1/1 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2014 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 105 /9/எப்ஜீ/14 ஆம் இலக்க கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை | வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தைப் பூர்த்திசெய்து நாட்டிற்கு மீள வருகை தந்து 07 நாட்களுக்குள் உரிய வெளிநாட்டுப் பயணம் தொடர்பான ஓர் அறிக்கை வெளிநாட்டுப் பயணத்தை அங்கீகரித்த அதிகாரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்கள உத்தியோகத்தர் களின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பாக அவ் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 4.6 செயலாற்றல்

2014 ஆம் ஆண்டின் செயலாற்றல் திட்டத்தின் படி, திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

### (அ) வெளிநாட்டு வாணிப பிரதிநிதித்துவம்

மேம்பாட்டு கண்காட்சிகளுக்காக, நட்பு நாடுகளுக்கு இலங்கையின் பங்கேற்பும் இலங்கைக்கு நட்பு நாடுகளின் பங்கேற்பும் போன்று இலங்கைக்கு தூதுவர்களின் வருகையில் 2013 ஆம் ஆண்டைப் பார்க்கிலும் 2014 ஆம் ஆண்டின் போது குறைவு ஏற்பட்டிருந்தமையால் இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) இரு தரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) இந்தியா மற்றும் பாகிஸ்தானுடன் இலங்கை 2014 ஆம் ஆண்டின் போது ஏற்படுத்தப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் படி, இரண்டு நாடுகளினதும் இறக்குமதி விருத்தியைப் பார்க்கிலும் ஏற்றுமதியின் அளவை விருத்திசெய்வதற்கு முடியாதிருந்தது.

(ii) இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் படி, 375.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஏற்றுமதி பெறுமதிக்கு மேலதிகமாக இறக்குமதி பெறுமதி 540 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை 2014 ஆம் ஆண்டின் போது விருத்தியடைந்திருந்தது.

(iii) பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் படி, 2014 ஆம் ஆண்டின் போது 51.78 மில்லியன் அமெரிக்க டொலர்களாக ஏற்றுமதிப் பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இறக்குமதி பெறுமதி 79.12 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்திருந்தது.

**(இ) தோற்றச் சான்றிதழ்கள் வழங்குதல்**

---

திணைக்களத்தால், முன்னுரிமை, பிராந்திய இருதரப்பு மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் ஏற்றுமதி செய்யப்படும் இலங்கை தோற்ற உற்பத்திகளுக்கு தோற்றச் சான்றிதழ்கள் வழங்குவது 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டின் போது 117,337 முதல் 120,302 வரை 2.5 சதவீத அளவான சிறிய அதிகரிப்பைக் காண்பித்தது. பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழும் உலக வர்த்தகமயமாக்கல் முறையின் கீழ் இது முறையே 14 சதவீதமாகவும் 27 சதவீதமாகவும் நூற்றுவீதத்தில் விநியோகிக்கப்பட்ட தோற்றச் சான்றிதழ் அளவுகளில் குறைவைக் காண்பித்தது.

**(ஈ) 1949 இன் 06 ஆம் இலக்க ஈட்டு அதிகாரச்சட்டத்தின் கீழ் கடன் வழங்கும் நிறுவக அங்கீகாரம்**

---

1949 இன் 06 ஆம் இலக்க ஈட்டு அதிகாரச்சட்டத்தின் கீழ் எந்த ஒரு கம்பனியும் வர்த்தகக் கம்பனி, நிறுவகம் அல்லது நபர் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் ஓர் நிறுவகமாக பரிந்துரைக்கப்படுவதற்கு வணிகப் பணிப்பாளருக்குக் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின் கீழ் 2014 சனவரி 13 ஆம் திகதி முதல் 2017 சனவரி 12 ஆம் திகதி வரை அமுலாகும் வகையில் 03 ஆண்டு காலத்திற்காக அதிகாரச்சட்டத்தின் செயற்பாடுகளுக்காக ஸ்தாபிக்கப்பட்ட ஓர் சபையால் மீளாய்வாண்டுக் காலப்பகுதியின் போது சமர்ப்பிக்கப்பட்ட 18 விண்ணப்பங்களில் 10 மாத்திரமே பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

அச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக இத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பின்வரும் செயற்பாடுகள் தொடர்பிலான முன்னேற்றம் பரீட்சிக்கப்பட்டு போதுமான தகவல்கள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பான தேவையான தகவல்களும் அறிவை விருத்தி செய்வதன் மூலம் சிவில் சமூகத்திற்கு இடையே அறிவூட்டல்.
- ஏற்றுமதி மேம்பாடு
- ஜீஎஸ்பீ ஆலோசனைகள் உள்ளடங்கிய முன்னுரிமை சந்தை உடன்படிக்கையின் கீழ் ஏற்றுமதித் தரவு வங்கியாகச் செயற்படுதல்.
- நேரடி வெளிநாட்டு முதலீட்டை மேம்படுத்தல்.
- சுற்றுலா வியாபாரத்தை மேம்படுத்தல்.

### 4.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 63 | 50 | 13 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 1 | 4 |
| (iii) | இரண்டாம் நிலை | 72 | 41 | 31 |
| (iv) | ஆரம்ப நிலை | 19 | 17 | 2 |
| | மொத்தம் | 159 | 109 | 50 |

## 5. தலைப்பு 297 - நிறுவனப் பதிவாளர் திணைக்களம்

### 5.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்பட்டிராமை

கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 மற்றும் திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அரசாங்கக் கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 2.11.2 வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |
| (இ) | மனுக் கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 5.2.1 வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | பொருட் பதிவேட்டுப் புத்தகங்கள் | நிதிப் பிரமாணம் 454(1) | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை |

**5.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்**

02 செலவின விடயங்களுக்காக ரூபா 2,659,276 தொகையான மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதை அடுத்து மிகுதி அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 14 சதவீதத்தையும் 18 சதவீதத்தையும் கொண்டிருந்தது.

**5.3 வருமானக் கணக்குகள்**

திணைக்களத் தலைவர், வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 02 வருமானக் குறியீடுகளிற்கான வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானம் சேகரித்தல், கணக்கீடு மற்றும் கணக்குகள் சமர்ப்பித்தல் செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவ் வருமானக் குறியீடுகளிற்கு உரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) 20.03.02.10 ஆம் இலக்க வருமானக் குறியீடு - நிறுவனப் பதிவாளர் கட்டணம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த பாதீட்டின் படி, மேற்குறித்த வருமானக் குறியீட்டில் ரூபா 130 மில்லியன் தொகையான வருமானத்தைச் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 141 மில்லியன் தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. இதன் படி, மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 108 சதவீதமான வருமானத்தை திணைக்களம் சேகரித்திருந்தது.

(ii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானக் கணக்கின் படி ரூபா 169,475,000 தொகையான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்காக மாத்திரம் ரூபா 73,711,667 தொகையான வருமான நிலுவையைக் கொண்டிருந்தது. அவ் வருமானத்தை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**(ஆ) 20.03.10.12 ஆம் இலக்க வருமானக் குறியீடு - பொது ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் அறவிடப்படும் கட்டணம்**

வருடாந்த பாதீட்டின் படி, மேற்குறித்த வருமானக் குறியீட்டில் இருந்து ரூபா 5 மில்லியன் தொகையான வருமானத்தைச் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அம் மதிப்பீடு ரூபா 10 மில்லியன் வரை திருத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 17 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தமையால் சேகரிக்கப்பட்ட வருமானத் திருத்த மதிப்பீட்டில் 170 சதவீதமாகக் காணப்பட்டது.

**5.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

29701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்று தொடர்பாக அன்றைய தினத்தில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 154,144 தொகையான கடன் மீதி 06 மாதங்கள் முதல் 25 ஆண்டுகள் வரையான காலமாக நிலவிவந்த போதிலும், அந் நிலுவைக் கடன் மீதியை அறவிடும் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

**5.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**5.5.1 வருடாந்த செயலாற்றல் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 வருடாந்த செயலாற்றல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. செயலாற்றல் திட்டத்தின் மூலம் திணைக்களத்தால் தமது நோக்கை எய்துவதற்காக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு செயற்பாட்டினது தன்மையும் அதற்காக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களும் பிரிவுகளும் நோக்கங்களை எய்துவதற்காக எடுக்கும் காலப்பகுதி ஆகியவை வெவ்வேறாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5.2 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5.3 உள்ளகக் கணக்காய்வு**

2009 யூன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009 (1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரமும் நிதிப் பிரமாணம் 133(2) இன் பிரகாரமும் போதிய உள்ளகக் கணக்காய்வொன்று மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்து முகாமைத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

திணைக்களத்திடம் காணப்பட்ட சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டமை கணக்காய்வுத் தெரிவுச் செய்வையின் போது அவதானிக்கப்பட்டது.

(i) கம்பனிப் பதிவாளர் திணைக்கள நடவடிக்கைகள் கணனி மயமாக்கப்படல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஸ்கான் செய்யப்பட்ட கோவைகள் வைப்பில் இடுவதற்கு ரூபா 453,750 பெறுமதிக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 15 இறாக்கைகள் பயன்படுத்தப்படாது 2014 நவம்பர் 28 ஆம் திகதி முதல் பதிவகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) மறுசீரமைப்பின் கீழ் ஸ்கான் செய்யப்படும் ஆவணங்கள் மீளக் கோவையிடப்படுவதற்கு விசேடமாகத் தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 2,180,000 பெறுமதியான 54,500 கோவைகள் 2015 மார்ச் 27 ஆம் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) 2015 தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக பாடசாலைகளில் நூலகங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 2014 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 683,910 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த புத்தகங்கள் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாது திணைக்களக் களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தன. அப் புத்தகங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக எவ்வித நடவடிக்கையும் 2015 மார்ச் 27 ஆம் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நிறுவனப் பதிவாளர் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை நிறுவுவதற்கு ரூபா 147,360 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அப் பிரிவு தற்போது செயலிழந்த நிலைக்கு உட்பட்டிருந்தது. அப் பிரிவை நிறுவுகையில் செலவிடப்பட்ட தொகையில் பெறப்பட்டிருந்த கணனியும் இணையதள வசதிகளும் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன.

(v) நிறுவகத்திடம் காணப்பட்ட டபிள் கப் வண்டி ஒன்று பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படல்**

"சமாகம் மெதுர" கட்டிடத்தைத் திருத்துகையில் கழற்றி அகற்றப்பட்டிருந்த கண்ணாடிகள் 2014 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிராததுடன் 06 மாதங்களுக்கும் மேலான காலமாக பாதுகாப்பின்றி ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்த இக் கண்ணாடி, பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கோ அல்லது ஏலவிற்பனை செய்யப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

"சமாகம் மெதுர" கட்டிடப் பழுதுபார்ப்பின் போது ஆலோசனைச் சேவைகளை வழங்கிய நிறுவகத்திற்கு, அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 3.4.4 ஆம் வழிகாட்டலுக்கு மாறாக ஆலோசனைச் சேவை மதிப்பீட்டில் 50 சதவீதமான அதாவது ரூபா 250,000 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 5.8 செயலாற்றல்

2014 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயலாற்றல் திட்டத்தின் படி திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) நிறுவனங்கள் மற்றும் ஏனையவற்றின் பதிவு

நிறுவனங்கள் மற்றும் ஏனையவற்றின் பதிவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| செயலாற்றல் | எண்ணிக்கை 2014 | எண்ணிக்கை 2013 | வேறுபாடு (குறைவு)/ அதிகரிப்பு | சதவீதம் |
|---|---|---|---|---|
| புதிய நிறுவனங்களின் பதிவு | 7,100 | 6,047 | 1,053 | 17.41 |
| பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் கோவைகளைப் பரீட்சித்தல் | 10,838 | 10,847 | (9) | (0.08) |
| பெயர்களுக்கான அங்கீகாரம் | 13,260 | 12,075 | 1,185 | 9.8 |
| பிரதிகளின் உறுதிப்படுத்தல் | 43,379 | 36,531 | 6,848 | 18.74 |
| புடிவங்களைப் பதிவு செய்தல் | 72,644 | 70,659 | 1,985 | 2.80 |
| வருடாந்த அறிக்கைகளைப் பதிவு செய்தல் | 31,324 | 29,853 | 1,471 | 4.93 |
| நிதி அறிக்கைகளைப் பதிவு செய்தல் | 2,376 | 2,867 | (491) | (17.12) |
| புடிவங்களின் விற்பனை | 3,478 | 4,207 | (729) | (17.33) |
| செயலாளர்களைப் பதிவு செய்தல் | 566 | 437 | 129 | 29.52 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதி அறிக்கை பதிவு செய்தல், படிவ விற்பனை மற்றும் கோவைகள் பரீட்சித்தல் வருமானம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது குறைந்திருந்ததுடன் இதற்கு மேலதிகமாக ஏனைய செயற்பாடுகளுக்கும் வருமானம் அதிகரித்திருந்த போதிலும் அவ் வருமான அதிகரிப்பு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாகக் குறைவான அளவைக் கொண்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட 71,110 கம்பனிகளில் அன்றைய தினத்தில் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய கம்பனிகளின் எண்ணிக்கை 59,113 ஆகக் காணப்பட்ட போதிலும் அன்றைய தினத்தில் வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்த கம்பனிகளின் எண்ணிக்கை 14,886 ஆகக் காணப்பட்டது. இதன் படி, சமர்ப்பிக்கப்படாத 44,227 வரையறுக்கப்பட்ட கம்பனிகளில் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிராத நிலுவையான வருடாந்த அறிக்கைப் பதிவு வருமானம் ரூபா 221,135,000 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் வருடாந்த அறிக்கை பதிவு செய்தலின் நிலுவைத் தொகை ரூபா 508,425,000 தொகையான வருமானத்தைச் சேர்த்துக்கொள்வதற்கு கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தால் எவ்வித விசேட நடவடிக்கையும் 2015 மார்ச் 27 ஆம் திகதி வரையிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம்**

கம்பனிகள் அதிகாரச்சட்டத்திற்கு இணங்க வரையறுக்கப்பட்ட கம்பனிகளைப் பதிவுசெய்தல், பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் செயற்பாடுகளை மேற்பார்வைசெய்தல் மற்றும் இதன் படி செயற்படுவதாக பொறுப்புக் கூறல், அவ்வாறு செயற்படாத சந்தர்ப்பங்களின் போது பதிவு செய்யப்பட்ட கம்பனி செயற்பாடுகள் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தினால் விதந்துரைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது கம்பனிப் பதிவாளர் நாயகத்திற்கு கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள நியதிச்சட்ட செயற்பணியாகக் காணப்பட்டது. பதிவு செய்யப்பட்ட கம்பனி செயற்பாடுகளின் ஒழுங்குபடுத்தல் நலிவான நிலையில் இருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. இவ்வாறே கம்பனிகளின் செயற்பாடுகள் ஒழுங்கமைப்பிற்காக செயற்பாட்டு நடவடிக்கை ஒன்று கம்பனிப் பதிவாளர் திணைக்களத்திடம் 2015 மார்ச் 27 ஆம் திகதி வரையிலும் இருக்கவில்லை.

**(இ) கணக்காய்வாளர்கள் பதிவு செய்யப்படுதலும் பதிவு செய்யப்பட்டுள்ளவர்கள் புதுப்பிக்கப்படுதலும்**

மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் புதிய கணக்காய்வாளர்களை முறையே 77 பேரையும் 74 பேரையும் புதிதாகப் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் இவர்களிடம் இருந்து பெறப்படும் வருமானம் முறையே ரூபா 136,590 தொகையாகவும் ரூபா 9,900 தொகையாகவும் காணப்பட்டது. இவ்வாறே முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வருமானம் 1279 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் பதிவாகிய கணக்காய்வாளர்களின் புதுப்பித்தல்கள் 532 ஆகவும் 556 ஆகவும் கிடைக்கப்பெற்ற வருமானம் முறையே ரூபா 927,632 ஆகவும் ரூபா 12,232 ஆகவும் இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மேற்குறித்த பதிவு புதுப்பிக்கப்பட்ட எண்ணிக்கை 24 ஆல் குறைவடைந்திருந்த போதிலும் வருமானம் ரூபா 915,400 ஆல் அதிகரித்திருந்தமை தொடர்பாக மீளாய்வாண்டின் ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் புதிய கணக்காய்வாளர்கள் பதிவுக் கட்டணமும் புதுப்பித்தல் கட்டண அதிகரிப்பும் முக்கிய காரணமாகியிருந்தன.

**(ஈ) 1891 இன் 16 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டம்**

மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் 1891 இன் 16 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் முறையே 67 சங்கங்களும் 169 சங்கங்களும் பதிவு செய்யப்பட்டமையால் கிடைக்கப்பெற்ற வருமானம் முறையே ரூபா 9,325 ஆகவும் ரூபா 4,225 ஆகவும் இருந்தது. மீளாய்வாண்டின் ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் சங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட முத்திரை வருமானத்தை இரத்துச் செய்து கட்டணம் அறவிடப்பட்டமை வருமான அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகியிருந்தது.

**(உ) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச்சட்டம்**

1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச்சட்ட ஏற்பாடுகளின் படி ரூபா 5 மில்லியனிற்கு மேற்படும் சகல ஒப்பந்தக்

கம்பனிகளும் பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டிருந்த பொது ஒப்பந்தங்களின் எண்ணிக்கை முறையே 10,384 ஆகவும் 4,320 ஆகவும் இருந்ததுடன் இதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் முறையே ரூபா 17,016,000 தொகையாகவும் ரூபா 6,966,000 தொகையாகவும் காணப்பட்டது. இதன் படி, மீளாய்வாண்டின் போது பதிவு செய்யப்பட்டிருந்த பொது ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 6,064 ஆலும் வருமானம் ரூபா 10,050,000 தொகையாலும் அதிகரித்திருந்தது.

### 5.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கடமைகளையும் பணிகளையும் மேற்கொள்கையில் கம்பனிப் பதிவாளரால் ஏற்கப்படும் சகல செலவினங்களும் கம்பனி நிதியத்தால் ஏற்கப்பட முடியுமான போதிலும் கம்பனி அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் உப பிரிவின் படி, அங்கீகரிக்கப்பட்ட செலவினத்தின் கீழ் கொண்டுவரப்படாத வரையறுக்கப்பட்ட கம்பனிக்கு ரூபா 90,275,000 பெறுமதியான பங்குகள் 2007 மார்ச் 01 ஆம் திகதி கொள்வனவு செய்யப்படுவதற்கு செலவிடப்பட்டிருந்தது. 2015 மார்ச் 27 ஆம் திகதி வரை இம் முதலீட்டின் மூலம் எவ்வித நலனும் கிடைக்கப்பெற்றிராததுடன் இப் பங்குகளின் உரிமை கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சிற்கும் உரித்தாகக் காணப்பட்டது. பங்குகளைக் கொள்வனவு செய்த கம்பனி முறிவடைந்தமையால் கலைக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த மேற்குறித்த முதலீட்டுத் தொகைக்கு உரித்தான உரிமையோ அல்லது முதலீட்டுத் தொகையோ கம்பனி நிதியத்திற்குப் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு எவ்வித நடவடிக்கையும் 2007 மார்ச் 27 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.10 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வரையறுக்கப்பட்ட கம்பனிகள் பதிவுசெய்யப்படும் செயற்பாடு கணனிமயமாக்கற் செயற்திட்டத்திற்கான ஒப்பந்தம் ரூபா 88,812,227 ஒப்பந்தப் பெறுமதிக்கு தனியார் நிறுவகத்திற்கு 2014 சனவரி 21 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் படி, 2014 ஒக்டோபர் 20 ஆம் திகதிக்கு முன்னர் அதன் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும் 2015 மார்ச் 17 ஆம் திகதி வரையிலும் ஒப்பந்தம் இடைநடுவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் படி, கம்பனிகளினதும் சங்கங்களினதும் 61,000 கோவைகள் ஸ்கான் செய்யப்பட்டு வழங்கப்படுவதற்கு உடன்படிக்கையிடப்பட்டிருந்த போதிலும் 33,938 கோவைகள் மாத்திரம் ஒப்பந்தக்காரர்களால் ஸ்கான் செய்யப்பட்டிருந்தது. திணைக்களத்தால் ஒப்பந்த நடவடிக்கைகள் முறையான வகையில் வழிநடத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டதுடன் பின்தொடர் நடவடிக்கைகளும் முன்னேற்ற மீளாய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்தம் தொடர்பாக அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 5.4.8 (அ) வழிகாட்டலின் படி, செயலாற்றல் பிணை ஒன்று ஒப்பந்தக்காரரிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படாது ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்த இச் செயற்திட்டத்திற்குச் செலவிடப்பட்டிருந்த ரூபா 13,619,577 தொகை விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) “சமாகம் மெதுர” கட்டிடத்தைத் திருத்துவதற்கான ஒப்பந்தம் தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 12,664,317 ஆன ஒப்பந்தப் பெறுமதியில் 2014 ஏப்ரல் 23 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்திருக்க வேண்டிய போதிலும், 2015 மார்ச் 17 ஆம் திகதி வரையில் அதன் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்திராமையால் அவ் வேலைகளின் தாமதம் குறித்து உடன்படிக்கையின் பிரகாரம் தாமதத்திற்கான நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**5.11 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 12 | 06 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 123 | 79 | 44 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 17 | 07 | - |
| (v) | ஏனைய (அமைய) நிலை | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 162 | 105 | 58 | 01 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) “கம்பனிப் பதிவாளர் நாயகம்” பதவிக்கு 4 ஆண்டு காலமளவில் இருந்து நிலையான ஓர் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நானாவித பதவிகளில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் திணைக்களச் செயற்பாடுகளுக்கு அவை தாக்கமளித்த விதமும் பின்வருமாறாகும்.

| வெற்றிடங்கள் நிலவிய பதவி | எண்ணிக்கை | திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு நேர்ந்த தாக்கம் |
|---|---|---|
| உதவிக் கம்பனிப் பதிவாளர் | 03 | இப் பதவியின் மூலம் கம்பனிப் பதிவு நடவடிக்கைகள் செயற்படுத்தல், வருடாந்த அறிக்கை வருமானம் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுத்தல், கம்பனிகள் கலைக்கப்படும் நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| | | மேற்கொள்ளல், கம்பனி அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளுக்கு உரித்தான சான்றிதழின் பிரதிகளை வழங்குதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் படி, ஒழுங்கமைப்பு மற்றும் வருடாந்த அறிக்கை வருமானப் பெறுவனவு நலிவான நிலையில் காணப்பட்டது. |
| வியாபாரப் பகுப்பாய்வு உதவி உத்தியோகத்தர் | 08 | கம்பனிப் பதிவாளர் தொடர்பாக பொது மக்களுக்கு தகவல்கள் வழங்குதல், கம்பனிப் பதிவு தொடர்பாக தரவுகளைச் சேகரித்தலும் நிறுவகத்திற்குத் தேவையான வகையில் அத் தகவல்களை மீளத் தயாரிப்பதே இப் பதவியின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. ஆகையால் திணைக்களத்திற்குத் தேவையான தகவல்களைப் பெறும் நடைமுறை செயற்படுத்தப்படுவதில் சிரமம் ஏற்படுதல். |
| கம்பனிப் பரீட்சகர் | 03 | கம்பனி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்ட கம்பனிகளுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல், கம்பனிப் பதிவாளருக்காக நீதிமன்றத்தில் தோன்றுதல் போன்ற நடைமுறைகளுக்கு நேரடியான தாக்கம். |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 12 | ஒரு உத்தியோகத்தரால் 1500 கோவைகள் நிறைவேற்ற வேண்டியுள்ளமையால் தாமதம் ஏற்படுதல். |

(i) திணைக்களத்தால் மாவட்டச் செயலகத்திற்கு ஈடுபடுத்தப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 12 பேரின் செயற்பாடுகள் நேரடியாகக் கண்காணிக்கப்படுவதற்கான ஓர் முறை இருக்கவில்லை.

(ii) திணைக்களத்தின் புதிய உத்தியோகத்தர்களுக்கு நிறுவகத்தின் செயற்பாடுகளும் அவற்றை மேற்கொள்ளும் விதம் குறித்தும் போதிய முன் பயிற்சி வழங்கப்படும் முறையான நடைமுறைகள் நிறுவகத்தில் இருக்கவில்லை.

6. **தலைப்பு 299 - இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம்**

6.1 **பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படல்**

இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | **பதிவேட்டின் வகை** | **உரிய பிரமாணம்** |
|---|---|---|
| (i) | பிணைப்பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) |
| (ii) | மின் உபகரணப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) |
| (iii) | வாகனப் பட்டியல் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1647 (உ) |
| (iv) | கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் வருகைப் பதிவேடு | அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 2.11.2 வழிகாட்டி |
| (v) | குழுக் கூட்ட அறிக்கை | அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 2.11.3 (அ) வழிகாட்டி |

6.2 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்**

02 செலவின விடயங்களுக்காக ரூபா 1,428,811 தொகையான மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதை அடுத்து மிகுதி அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 12 சதவீதத்தையும் 39 சதவீதத்தையும் கொண்டிருந்தது.

6.3 **அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

29901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்று தொடர்பாக அன்றைய தினத்தில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 139,410 தொகையான கடன் மீதி 05 ஆண்டுகளுக்கு மேலான காலமாக நிலவிவந்த போதிலும், அம் மீதி 2014 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6.4 **நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிராததுடன் கைத்தொழில் மற்றும் வாணிப நடவடிக்கைககள் அமைச்சின் உள்ளகக்

கணக்காய்வுப் பிரிவால் அந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்காக ஒரு உள்ளகக் கணக்காய்வு ஐயவினா மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. இதன் படி, மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**6.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்திற்காக பாதுகாப்பகம் நிர்மாணித்தல்**

இவ் அலுவலகத்திற்கு பாதுகாப்பகம் ஒன்றையும் விற்பனை மேம்பாட்டு நிலையம் ஒன்றையும் நிர்மாணிப்பதற்கு ரூபா 22,298,751 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அக் கட்டிடம் அமைந்துள்ள காணி நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குப் பொறுப்பேற்கப்பட்டிருந்தமையால் கட்டிட நிர்மாணிப்பிற்காகச் செலவிடப்பட்டிருந்த பணம் தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்திற்கு மீளளிக்குமாறு 2015 ஏப்ரல் 23 ஆம் திகதிய இல. ஆமப/15/0272/625/007 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அந் நிதி கணக்காய்வுத் தினமாகிய 2015 மார்ச் 10 ஆம் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட முடியாதிருந்தது.

**6.6 செயலாற்றல்**

2014 வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயலாற்றல் திட்டத்தின் படி, திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, மீளாய்வாண்டிற்கு உரித்தான வியாபாரக் குறியீடு, ஆக்க உரிமை மற்றும் தொழில்நுட்ப திட்டப் பதிவு தொடர்பான செயலாற்றலுக்கு உரித்தான தகவல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| | வியாபாரக் குறியீட்டு பதிவு | | ஆக்க உரிமை பதிவு | | தொழில்நுட்ப திட்டப் பதிவு | |
|---|---|---|---|---|---|---|
| | **2014** | **2013** | **2014** | **2013** | **2014** | **2013** |
| முன்னைய ஆண்டில் இருந்து முன்கொண்டுவரப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 36,060 | 28,720 | 1,805 | 1,525 | 1,171 | 955 |
| ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் எண்ணிக்கை | 8,552 | 8,825 | 536 | 516 | 292 | 346 |
| ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 44,612 | 37,545 | 2,341 | 2,041 | 1,463 | 1,301 |
| ஆண்டின் போது பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | (1,138) | ( 1,485) | (263) | (236) | (529) | (130) |
| முன்னைய ஆண்டிற்குக் கொண்டு சென்ற எஞ்சிய கோவைகளின் எண்ணிக்கை | 43,474 | 36,060 | 2,078 | 1,805 | 934 | 1,171 |
| ஆண்டின் போது செயற்படும் கோவைகளின் எண்ணிக்கை | (34,501) | (16,400) | (1,909) | (1,730) | (934) | (729) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ---------- | -------- | -------- | -------- | ------- | ------- |
| எந்த வித செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டிராத கோவைகளின் எண்ணிக்கை | 8,973 | 19,660 | 169 | 75 | - | 442 |
| | ===== | ====== | ===== | ===== | ==== | ===== |

வியாபாரக் குறியீடு, ஆக்க உரிமைப் பத்திரம் மற்றும் கைத்தொழில் திட்டங்களைப் பதிவு செய்வது புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் பிரதான செயற்பாடான போதிலும், அது முறையாக மேற்கொள்ளப்பட்டிராமை மேற்குறித்த தகவல்களின் படி கண்டறியப்பட்டது.

(ஆ) வியாபாரக் குறியீடு, ஆக்க உரிமைப் பத்திரம் மற்றும் கைத்தொழில் திட்டங்களைப் பதிவு செய்யும் இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் பிரதான செயற்பாடு மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டதன் காரணமாக புதிய ஆக்குனர்கள் அதைரியத்திற்கு உட்டுத்தப்பட்டு உரிய நேரத்திற்கு பதிவாகியிராமையால் புதிய ஆக்கத்தின் மூலம் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பு பெறப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கையை விரைவாகப் பதிவு செய்வதற்கு 2013 ஆம் ஆண்டின் மே மாதம் துண்டு அடிப்படையில் கொடுப்பனவு முறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது வியாபாரக் குறியீட்டுப் பதிவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 347 விண்ணப்பங்கள் அதாவது 23 சதவீதத்தால் குறைந்திருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது வியாபாரக் குறியீடு, ஆக்க உரிமைப் பத்திரம் மற்றும் கைத்தொழில் திட்டங்களைப் பதிவைத் துரிதப்படுத்துமுகமாக அலகு அடிப்படையில் ரூபா 1,262,595 தொகையான மேலதிகக் கிரயம் இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும், வியாபாரக் குறியீடு மற்றும் கைத்தொழில் திட்டங்களின் பதிவு தொடர்பான முன்னேற்றம் கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாத நிலையில் காணப்பட்டது.

(இ) இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் முக்கிய செயற்பாடுகளை மேற்கொள்ளப்பட்டிராத சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகும்.

(i) கணனி முறைமை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு ரூபா 1.4 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) புதிய அலுவலகக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 100 மில்லியன் தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6.7 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 07 | 05 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 72 | 36 | 36 |
| (iv) | ஆரம்ப நிலை | 11 | 10 | 01 |
| | மொத்தம் | 94 | 54 | 40 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் முக்கிய பதவியான புலமைச் சொத்துக்கள் பணிப்பாளர் நாயகத்தின் பதவி 02 வருட காலமாக வெற்றிட நிலையில் காணப்பட்ட போதிலும் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது பதில் கடமைக்காக ஓர் பெண் உத்தியோகத்தர் 2014 மார்ச் 15 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தார். இதற்கு மேலதிகமாக பதில் பணிப்பாளர் பதவி ஒன்றும் வெற்றிட நிலையில் காணப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் 40 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 7. தலைப்பு 303 – புடவைக் கைத்தொழில் திணைக்களம்

## 7.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 845 (1) |
| (இ) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) |

(ஈ) மின் உபகரணப் பதிவேடு நிதிப் பிரமாணம் 454 (2)

(உ) பட்டோலைகள் நிதிப் பிரமாணம் 341

**7.2 எல்லைகள் பின்பற்றப்பட்டிராமை**

30301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த ஆகக் குறைந்த வருமான எல்லை ரூபா 3,000,000 ஆகவும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான பெறுவனவுகள் ரூபா 2,946,176 ஆகக் காணப்பட்டமையால் ஆகக் குறைந்த வருமான எல்லை ரூபா 53,824 ஆல் எய்தப்பட்டிருக்கவில்லை.

**7.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**7.3.1 பாதீட்டு முரண்**

08 செலவின விடயங்களுக்காக ரூபா 8,490,662 தொகையான மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து மீதி, அச் செலவின விடயங்களுக்கு உரிய தேறிய ஏற்பாட்டில் 10 சதவீதம் முதல் 64 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**7.3.2 அமைச்சால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடு**

மாத்தளை மாவட்டத்தில் கையுளவு இயந்திரங்கள் கைத்தொழில் கிராமங்களை ஸ்தாபிப்பதற்காக அமைச்சால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாட்டில் ரூபா 5,185,000 தொகை செலவிடப்பட்டு கையுளவு இயந்திரம் கொள்வனவு செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கையுளவு இயந்திரம் பெறப்படாது இதற்கு உரித்தான காசோலை 2015 யூன் 29 ஆம் திகதிய பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

**7.4 கட்டுநிதிக் கணக்கு**

நிதிப் பிரமாணம் 371 இன் படி, குறித்த செயற்பாடு முடிவுற்றதை உடனடுத்து பெறப்பட்ட குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், பணி முடிவுற்று 01 மாதம் முதல் 04 மாதங்கள் வரையான காலப்பகுதியிலான தாமதத்தின் பின்னர் ரூபா 50,000 தொகையான துணைக் கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது.

**7.5 பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒரு மாதத்திற்காக பொது 71 படிவத்தில் தயாரிக்கப்பட்ட மாதாந்த வைப்புப் பொழிப்புக் கூற்று அடுத்துவரும் மாத முடிவிற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சனாதிபதி மேலதிகச் செயலாளரால் 2013 மார்ச் 25 ஆம் திகதி கையுளவு இயந்திரம் கொள்வனவு செய்யப்படுவதற்காக வழங்கப்பட்ட ரூபா 2,112,600

தொகை 2015 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் உரிய பணி மேற்கொள்ளப்படாது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

## 7.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

30301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அன்றைய தினத்தில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 117,586 தொகையான மீதி 01 வருடம் முதல் 11 வருடங்கள் வரையான கால வீச்சிலிருந்து நிலவிவந்த போதிலும், அந் நிலுவைக் கடன் மீதியை அறவிட்டுக் கொள்வதற்குகான பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) காணி ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக ஆதனக் கடன் தொகை ஒன்றைப் பெற்ற ஓர் உத்தியோகத்தர் 2002 ஆம் ஆண்டின் போது இறந்தமையால் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 108,465 தொகையான கடன் மீதி 12 ஆண்டுகளுக்கு மேலான காலமாக நிலவி வந்திருந்தது. அக் கடன் தொகை தொடர்பாக அட்டோனி அதிகாரம் பதிவு செய்யப்பட்டிராமை, உரிய காணி உறுதி திணைக்களத்தின் பொறுப்பில் வைத்துக்கொள்ளப்படாது கடன் வழங்கப்பட்டமை தொடர்பான விசாரணை ஒன்றை மேற்கொண்டு உரிய பொறுப்புடைய உத்தியோகத்தரிடம் இருந்து அந் நிலுவைக் கடன் மீதி அறவிடப்பட வேண்டியதாக அரச நிதித் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தால் இதற்குப் பொறுப்பான தரப்பினர் ஓய்வுபெற்றுச் சென்றிருந்தமையால் அக் கடன் தொகையை அறவிடுவதற்கான ஆலோசனைகள் கோரப்பட்டு சட்டமா அதிபதிக்கு 2014 யூலை 01 ஆம் திகதி கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அக் கடன் தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(இ) இணக்கக் கூற்றிலான தனியான மீதியின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகையும் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிக்கும் இடையிலான ரூபா 195,525 தொகையான வேறுபாடும் காணப்பட்டது.

(ஈ) ஓய்வு பெற்ற ஆறு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 365,517 ஆகக் காணப்பட்டது.

## 7.7 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 7.7.1 வருடாந்த செயலாற்றல் திட்டம்

2014 திசெம்பர் 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**7.7.2 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிராமையால் மீளாய்வாண்டிற்கு உரித்தான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**7.7.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்து முகாமைத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

பின்வரும் சொத்துக்கள் விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமாக நிலவியமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(i) கடுபெத்த புதிய விரிவுரை மண்டபத்தில் வேறு நிறுவகங்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுவதற்கு வாடகை அடிப்படையில் வழங்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவ் விரிவுரை மண்டபம் மீளாய்வாண்டின் போது இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) கஹவத்த மற்றும் நுவரெலியாவில் உள்ள முறையே ஹிரமடகம மற்றும் சாந்திபுர எனும் கைத்தொழில் பாடசாலைகள் மீளாய்வாண்டின் போதும் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது.

(iii) திணைக்களத்திற்கு உரித்தான ஓர் வாகனம் 2013 ஆம் ஆண்டு முதல் விளைவற்று கட்டுபெத்த தொகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) வேறு நிறுவனத்திற்கு உரித்தான சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படல்

நிதி அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த வாகனம் ஒன்று 2010 ஆகஸ்ட் 05 ஆம் திகதி திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், இது திணைக்களத்தின் பெயரில் பொறுப்பேற்கப்படுவதற்கு 2015 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**7.8 தீர்க்கப்படாத பொறுப்புகள்**

திணைக்களத்தால் 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான தீர்க்கப்படாத ஒரு வருடத்திலும் குறைவான பொறுப்புகள் ரூபா 645,483 ஆகக் காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) நிதிப் பிரமாணம் 94 இற்கு முரணாக உள்நாட்டுப் போக்குவரத்துச் செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டதன் பின்னரான மீதி ரூபா 47,246 தொகையால் மிகைத்து பொறுப்புகள் ஏற்பட்டிருந்தன.

(iii) திணைக்களத்தால் நிதிப் பிரமாணம் 214 இன் படி, பொறுப்புகள் நாளாந்தம் பரீட்சிக்கப்படக் கூடிய வகையில் பொறுப்புகள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**7.9 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | |
| (i) நிதிப் பிரமாணம் 1645 (அ) | ஓவ்வொரு வாகனம் தொடர்பாகவும் வாகனச் சம்பவப் பதிவேடு பேணப்பட வேண்டிய பேதிலும், 02 வாகனங்களுக்கு உரித்தான சம்பவப் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 1646 | ஓவ்வொரு மாதத்திற்கும் உரித்தான நாளாந்த ஓட்ட அட்டவணை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 06 வாகனங்கள் தொடர்பாக இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| **(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள்** | |
| 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | வாகனங்கள் தொடர்பாக 06 மாதங்களுக்கு ஒரு முறை எரிபொருள் பயன்பாடு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் 03 வாகனங்கள் தொடர்பாக மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் பயன்பாட்டுப் பரிசீலனை ஒரு வருடத்திற்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| **(இ) அரச நிதிச் சுற்றறிக்கை** | |
| 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402 (1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 ஆம் 4 ஆம் பந்தி | 2004 சனவரி 01 ஆம் திகதியின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சொத்துக்கள் தொடர்பான விபரம் |

உள்ளடக்கப்பட்ட ஓர் அறிக்கை அரை ஆண்டிற்கு ஒரு முறை அரச நிதித் திணைக்களத்திற்கு ஓர் பிரதியுடன் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரச கணக்குகள் சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 2013 யூலை 12 ஆம் திகதிய எஸ்ஏ/ஏஎஸ்/ஏஏ ஆம் இலக்க சுற்றறிக்கை | திணைக்களத்திடம் உள்ள காணி, கட்டிடங்களின் மதிப்பீட்டு நடவடிக்கைகள் 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இது முடிவுறுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது. |

**7.10 செயலாற்றல்**

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயலாற்றல் திட்டத்தின் படி, திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

**(அ) போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராத செயற்பாடுகள்**

திணைக்களத்தின் முக்கிய செயற்பாடுகள் போதுமான அளவில் மேற்கொள்ளப்பட்டிராத சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகும்.

**(i) புடவைக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலைக்காக மாணவர்களைச் சேர்த்தல்**

2013 யூலை 01 ஆம் திகதி முதல் 2014 யூலை 31 ஆம் திகதி வரை ஒரு வருட புடவைக் கைத்தொழில் பயிற்சிப் பாடநெறிக்காக செயலாற்றல் திட்டம் ஒன்றின் படி, 150 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக 135 மாணவர்கள் மாத்திரமே சேர்க்கப்பட்டிருந்ததுடன் பாடநெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களின் எண்ணிக்கை 114 ஆகக் காணப்பட்டது. இதன் படி, சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் 84 சதவீதமானோர் மாத்திரமே பாடநெறியைப் பூர்த்திசெய்திருந்தனர்.

**(ii) வடிவமைப்புப் பயிற்சிப் பாடசாலைக்காக மாணவர்கள் சேர்க்கப்படல்**

வடிவமைப்பு ஆக்குனர்களைப் பயிற்றுவிப்பதற்காக தங்குமிட ஒரு வருட வடிவமைப்புப் பயிற்சிப் பாடநெறிகள் கட்டம்பே மற்றும் கட்டுபெத்த வடிவமைப்புப் பயிற்சிப் பாடசாலைகளில் நடாத்தப்பட்டு வருகின்றன. 2014 சனவரி 06 ஆம் திகதி முதல் 2015 சனவரி 05 ஆம் திகதி வரையான கல்வி ஆண்டிற்கு 25 மாணவர்கள் வீதம், இரு பாடசாலைகளுக்கு 50 மாணவர்கள் சேர்க்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கட்டம்பே மற்றும் கட்டுபெத்த வடிவமைப்புப் பயிற்சிப் பாடசாலைகளிற்காக மாணவர்கள் முறையே 11 பேரும் 05 பேருமாக 16 பேர் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இது இலக்கிடப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் 32 சதவீதமாகக் காணப்பட்டது.

**(ஆ) திட்டமிடல்**

செயலாற்றல் திட்டத்தின் படி, தங்குமிடப் பயிற்சியின் கீழ் பலவேக கைத்தொழில் பயிற்சிச் செயலமர்வை நாடாத்துவதற்கு ரூபா 200,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. பௌதீக வளங்கள் மற்றும் வளங்களின் பங்களிப்பை வழங்குவதிலான சிரமம் மற்றும் நிதி வளங்கள் போதாதிருந்தமை போன்ற காரணங்களால் அச் செயலமர்வை நடாத்த முடியாதிருந்தது.

**(இ) முக்கிய செயற்பாடுகளுக்கு முரணான செயற்பணிகள்**

திணைக்கள நோக்கங்களுக்கு மாறான ஓர் விடயத்திற்காக பத்திரிகை விளம்பரம் ஒன்று பிரசுரிக்கப்படுவதற்காக ரூபா 214,200 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**7.11 வங்கிக் கணக்கின் செயற்பாட்டிலான குறைபாடுகள்**

வழங்கப்பட்டு எனினும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 39,948,567 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**7.12 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

**கொள்வனவு நடைமுறை வழிகாட்டி மீறல்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 கொள்வனவுத் திட்டத்தின் படி, ரூபா 300,000 தொகையான தளபாடக் கொள்வனவிற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது ரூபா 1,359,729 பெறுமதியான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) 2014 கொள்வனவுத் திட்டத்தின் படி, கைத்தொழில் பாடசாலை உபகரணக் கொள்வனவிற்கு ரூபா 700,000 தொகை செலவிடப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் மாதத்தில் கைத்தொழில் செயற்திட்டங்களுக்காக கை இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்படுவதற்கு ரூபா 2,054,900 தொகையான காசோலைகள் வரையப்பட்டிருந்த போதிலும் 2015 யூன் வரையிலும் அக் கை இயந்திரங்கள் பெறப்படாது இப் பணம் 2015 யூன் 29 ஆம் திகதி பொது வைப்புக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

**7.13 முகாமைத்துவ நலிவுகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(அ) குத்தகைக்கிடப்பட்டுள்ள காணிகள்**

கைத்தொழில் திணைக்களத்திற்கு உரித்தான பலவேக கைத்தொழில்

வியாபாரம் மற்றும் இதற்கு உரித்தான காணி, கட்டிடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் நீண்டகாலமாக குத்தகை அடிப்படையில் தனியார் வியாபாரங்களுக்கு திணைக்களத்தால் ரூபா 47,640,000 இற்குக் குத்தகைக்கிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1995 யூலை 21 ஆம் திகதிய எஸ்ஈஜ/ஏ/4/34 ஆம் இலக்க சனாதிபதி செயலகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் படி இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மேற்குறித்த சுற்றறிக்கையின் 8(அ) உப பந்தியின் பிரகாரம் மீட்புத் தொகை முன்னர் நியமிக்கப்பட்ட தொகையில் 150 சதவீதத்தைப் பார்க்கிலும் குறையாத வகையில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை குத்தகைப் பணம் காலத்திற்குக் காலம் மீட்கப்பட வேண்டிய போதிலும், இதன் படி, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், கடந்த ஆண்டின் போது இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுக் குழுவிற்குப் பதிலளிக்கும் வகையில் 2014 ஆம் ஆண்டு முதல் குத்தகைப் பணம் அதிகரிக்கப்படுவதாக கைத்தொழில் பணிப்பாளரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

- 8 (ஈ) உப பந்தியின் பிரகாரம் தொடர்ச்சியாக குத்தகை வாடகைக் கொடுப்பனவைச் செலுத்தத் தவறுவதால் குத்தகை உடன்படிக்கை சுயமாக இரத்துச் செய்யப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதன் படி, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 09 ஆம் பந்தியின் படி, வரி செலுத்துனரால் வரி உடன்படிக்கை தொடர்ச்சியாக புதுப்பிக்கப்பட வேண்டியதுடன் நிலுவைத் தொகை சேர்வதற்கு இடமளிக்காது பணச் சேகரிப்பதற்கும் தனியார் தரப்பினருக்கு காணி குத்தகைக்கிடப்படும் சகல அரச நிறுவகத்தினதும் பின்வரும் பணிகளை மேற்கொள்வதற்காக பதவிநிலை உத்தியோகத்தரின் தலைமையின் கீழ் விசேட பிரிவொன்றை ஏற்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

    - 9(அ) உப பந்தியின் படி, குத்தகைக்கு வழங்கப்படும் காணிக்குரிய பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

    - 9(ஆ) உப பந்தியின் படி, குறித்த காலப்பகுதியின் போது குத்தகை உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக குத்தகை வாடகையைச் சேகரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு பொறுப்பாக இருத்தல்.

    - 9(இ)உப பந்தியின் படி, குத்தகைப் பெறுனரால் உடன்படிக்கையின் பந்தி மற்றும் நிபந்தனை பின்பற்றப்படுகையில் கண்காணிக்கப்பட்டு அவதானிக்கப்படல் மற்றும் உடன்படிக்கையின் பந்தி மற்றும் நிபந்தனைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களின் போது ஆதனம் தொடர்பான உரிமையை மீளப் பெற்றுக்கொள்வதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படல்.

(ii) 2012 யூன் 29 ஆம் திகதி பீஎஸ்டீ/ஏஎஸ்டீ/04/02 ஆம் இலக்க அரச நிதித் திணைக்களக் கடிதத்தின் படி, ஒவ்வொரு அமைச்சின் கீழும் கொள்வனவு செய்யப்படும் திணைக்களக் காணி, கட்டிடங்கள் அரசாங்க பிரதான மதிப்பீட்டாளரினூடாக மதிப்பிடப்பட வேண்டிய போதிலும் இதன் படி, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) லே வெல்ல பலவேக வியாபாரம்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) பண்டாரவெல மின்வலு கைத்தொழில் வியாபாரத்திற்கு உரித்தான பிபில மற்றும் பஸ்ஸர புடவைக் கைத்தொழிற்சாலை**

புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கு உரித்தான பண்டாரவெல பலவேக நிறுவகத்திற்கு உரித்தான ஆதனங்களை விற்பனை செய்வதற்கு உரித்தான தரப்பினரிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கொன்றிற்கு உரிய 2001 யூன் 23 ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்வின் படி, அந்நாளில் இருந்து 03 வருடங்களுக்குள் ரூபா 845,268 தொகையான நிலுவைத் தொகை செலுத்தி முடிக்கப்பட வேண்டிய போதிலும் அத் தொகையை அறவிடுவதற்கு முகாமைத்துவம் கிரமமாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ii) பிபில ஆடைத் தொழிற்சாலை**

1996 சனவரி 01 ஆம் திகதி 99 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் ரூபா 150,000 தொகையான வருடாந்த குத்தகைத் தொகைக்கு தனியார் கம்பனி ஒன்றிற்கு மேற்குறித்த நிறுவகம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி, குத்தகைத் தொகை செலுத்தப்படாமை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுக்காக காணியும் கட்டிடங்களும் பயன்படுத்தப்பட்டிராமையால் உடன்படிக்கை இரத்துச்செய்யப் பட்டு 2011 ஆகஸ்ட் 04 ஆம் திகதி மீள கைத்தொழில் திணைக்களத்திற்குப் பொறுப்பேற்கப்பட்டு மெதகெதர பிரதேச செயலாளரிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 1,681,250 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(iii) ஹிங்குரக்கொட மின்வலு புடவைத் தொழிற்சாலை**

1993 சனவரி 21 ஆம் திகதி கைத்தொழில் திணைக்களத்துடன் ஒரு வருடத்திற்கு ரூபா 108,000 இற்குக் குத்தகையின் கீழ் மேற்குறித்த புடவைத் தொழிற்சாலைக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் குத்தகைக்குப் பெற்ற தரப்பினரால் குத்தகைத் தொகை செலுத்தத் தவறியமையால் 2001 பெப்ரவரி 12 ஆம் திகதி இக் காணியும் கட்டிடங்களும் ஹிங்குரக்கொட பிரதேச செயலாளரிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் இதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 529,600

தொகையான நிலுவைக் குத்தகைத் தொகையை அறவிடுவதற்காக திணைக்களத்தால் சட்டமா அதிபருக்கு 2013 நவம்பர் 18 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அத் தொகை அறவிடப்படுவதற்கு முடியாதிருந்தது.

**(iv) குருவிட்ட மின்வலு புடவைத் தொழிற்சாலை**

இப் பலவேக புடவைத் தொழிற்சாலையைக் குத்தகைக்குப் பெற்ற நிறுவனத்திடம் இருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்காக தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் படி, மேலதிக பாகங்கள் மற்றும் தண்டனை வட்டியாக ரூபா 225,846 தொகையைச் செலுத்துவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது. உரிய தரப்பினரால் இக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாதிருந்தது. இந் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு சட்ட ஆலோசனை 2013 நவம்பர் 06 ஆம் திகதி பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரை உரிய நிலுவைத் தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(v) யட்டிநுவர மின்வலு புடவைத் தொழிற்சாலை**

இக் காணியின் ஒரு பகுதியில் ஒரு நபர் குடியிருந்தமையால் காணியின் சுதந்திரமான அமைதியான உரித்தை குத்தகையாளருக்கு ஒப்படைப்பதற்கு முடியாதிருந்தது.

**(vi) தலாது ஓய மின்வலு புடவைத் தொழிற்சாலை**

2000 திசெம்பர் 01 ஆம் திகதி ரூபா 148,000 தொகையான குத்தகைத் தொகைக்கு முப்பது ஆண்டுகள் குத்தகை அடிப்படையின் கீழ் குத்தகைக்கு வழங்கிய தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அக் குத்தகை உடன்படிக்கையின் படி, இதற்கு உரித்தான குத்தகைத் தொகை உரிய தனியார் நிறுவனத்தால் குத்தகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக 2014 சனவரி 29 ஆம் திகதிய தலாதுஓய பிரதேச செயலாளரின் கடிதத்தின் படி, இதற்கு முன்னர் குத்தகைக்குப் பெற்ற தனியார் நிறுவகத்தின் குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிராமையால் வேறு நிறுவனத்திற்குக் குத்தகைக்கு வழங்கப்படுவதற்கு முடியாதெனவும், அந் நிறுவனம் இக் கட்டிடத்தில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளாது கைவிட்டுச் சென்றுள்ளதாகவும், வேறு நிறுவனம் இவ் இடத்தில் இயந்திரமயத்தின் ஊடாக மிளகு உலரவிடப்படும் செயற்திட்டம் ஒன்றை நடாத்துவதாகவும் ஆகும். ஏவ்வாறெனினும், இப் பிரச்சனையைத் தீர்த்து இக் காணியைக் குத்தகைக்கு இடப்பட்டு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,924,000 தொகையான குத்தகைத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(vii) உடுநுவர மின்வலு புடவைத் தொழிற்சாலை**

2000 பெப்ரவரி 01ஆம் திகதி முதல் முப்பது ஆண்டு காலக் குத்தகை அடிப்படையில் ரூபா 216,000 தொகையான வருடாந்தக் குத்தகைக்கு ஒரு நபருக்கு இவ் இடம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உரிய குத்தகையைப் பெற்றுக்கொண்டவர்களால் அவ் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 2,808,000 தொகையான குத்தகைத் தொகை அறவிடப்பட முடியாதிருந்தது.

**(viii) களுத்துறை மின்வலு செயற்திட்டம்**

அரசாங்கக் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த களுத்துறை மின்வலு செயற்திட்டத்தின் உதிரிப் பாகங்களிற்காக ரூபா 1,991,962 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. இந் நிலுவைத் தொகை அறவிடப்படுவதற்காக அக் கம்பனிக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு 1991 ஏப்ரல் 22 ஆம் திகதி தீர்விற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. மேற்குறித்த நிலுவைக் குத்தகைத் தொகையை அறவிடும் கால எல்லை கடந்துள்ளதாகவும் நிலுவைத் தொகையை அறவிடும் சட்ட ஏற்பாடு இல்லை எனவும் சட்டமா அதிபரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

**(இ) நட்டஈட்டுக் கொடுப்பனவு**

தனியார் தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த மின்வலு புடவைத் தொழிற்சாலை 10 ஆண்டுகளுக்கும் குறைவான சேவைக் காலத்துடன் வேலையை இழந்த ஊழியர்களுக்கு இரண்டு கட்டங்களின் கீழ் நட்டஈடு வழங்கப்படுவது 2014 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தது. நட்டஈட்டை வழங்கும் சந்தர்ப்பத்தில் இறந்த, நட்ட ஈட்டைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்திராத தேவையான ஆவணங்கள் இல்லாததன் காரணமாக நட்ட ஈட்டைப் பெற்றுக்கொள்ள முடியாது போன ஊழியர்களுக்காக மேலும் நட்டஈட்டைச் செலுத்த வேண்டியிருந்ததாகவும், 2015 யூலை மாதமளவில் நட்டஈட்டைச் செலுத்த வேண்டியதாக இனங்காணப்பட்டிருந்த 149 ஊழியர்களுக்காக ரூபா 6,592,000 தொகை மேலும் செலுத்தப்பட வேண்டியிருந்ததாகவும் கண்டறியப்பட்டது.

**7.14 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 05 | 04 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | - | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 109 | 93 | 16 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iv) | ஆரம்ப நிலை | 42 | 25 | 17 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலி/ ஒப்பந்த அடிப்படை) | - | 10 | - | 10 |
| | | ------- | ------- | ------- | ------- |
| | மொத்தம் | 157 | 132 | 35 | 10 |
| | | ==== | === | ==== | === |

**(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த மனிதவளங்கள்**

திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது காலி மாவட்டச் செயகத்திற்கு அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் ஒருவர் 2013 ஆம் ஆண்டில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தார்.